நமது நிருபர்

# மரம் சாய்ந்து கார் நசுங்கியது!



கோலாலம்பூர், நவ.19-
டேசா பாண்டான், ஜாலான் 1/76சியில் மரம் சாய்ந்து விழுந்த சம்பவத்தில் கார் ஒன்று பழுதடைந்தது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த இச்சம்பவத்தில் எந்த உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் தெரிவித்தது. அந்த வர்த்தகப் பகுதியில் இருந்த மரம் சாய்ந்ததால் அப்பகுதியில் சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.
இதில் மாநகர் மன்றப் பணியாளர்களுடன் இணைந்து மலேசிய பொதுத் தற்காப்புப் படையினரும் மரத்தை வெட்டும் பணியில் ஈடுபட்டனர்.
அதோடு மட்டுமின்றி அப்பகுதியில் சுத்தப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டு சம்பவ இடத்தில் போக்குவரத்தை அவர்கள் இயல்பு நிலைக்கு கொண்டு வந்தனர் என்று மாநகர் மன்றம் ஓர் அறிக்கையில் குறிப்பிட்டது.